# பாதையில் பெற்றோர்

*மறைத்திரு. ஜா. அமிர்தராச சுந்தர்*

## *முதல் நிலை*

### *தீர்ப்பு*

பெற்றோரே, உங்களது குழந்தைக்கு நல்மாதிரிகை காட்டுங்கள்.

இன்றைக்கு மனிதர்களை ஆள்வது முன்சார்பு எண்ணங்களா என்றால், ஆம் என்றே சொல்ல நேரிடுகின்றது. இத்தகைய நிலைக்கு பலர் காரணமானாலும், மிக முக்கிய காரணம் பெற்றோர் என்றால் மிகவே உண்மை.

குழந்தைகளை வளர்த்தெடுக்க முன்வரும் போது, பெற்றோரே முதல் ஆசிரியர்களாக திகழ்கிறார்கள். அவர்களது நடத்தையை பார்த்தே குழந்தையும் பலவற்றை கற்றுக் கொள்ள முன்வருகின்றது. பெற்றவர்களின் தாக்கம் குழந்தைக்கு மிகவே அதிகம்.

மண்ணிலே பிறக்கையிலே எல்லா குழந்தையும் நல்ல குழந்தைத் தான். அவன் நல்லவன் ஆவது பெற்றோரின் வளர்ப்பிலே என்பது முழு உண்மையே.

இந்நிலையில் பெற்றோர் முன்சார்பு எண்ணங்களை விதைத்திட முற்படும் போது, எந்த குழந்தையும் தவறான கருத்துக் கொள்ள வாய்ப்புண்டு. இதனை பெற்றோர் உணர்ந்தால், குழந்தைகள் தவறான தீர்ப்பினை எழுதிடமாட்டார்கள்.

## *இரண்டாம் நிலை*

### *பாரம்*

பெற்றோர்களே, குழந்தையை பாரமாக கருதிட வேண்டாம்.

வளரும் விஞ்ஞான உலகிலே, திறந்து விடப்பட்ட பொருளாதாரச் சந்தையிலே குழந்தைகளை வளர்த்தெடுப்பது பாரமாக இருந்திடலாம். ஆனால் அதனை குழந்தைகளின் மனதில் பதிய வைப்பதால் யாருக்கு என்ன பயன்?

மனிதன் வாழ்வதே இன்றைய விலைவாசியேற்றமாகும் காலச் சூழலில் சிரமமாகும் நிலையில், தன்னுடைய பிள்ளையை பாரமாக கருதி, இருக்கிற சுமை போதவில்லையென்று, இதனையுமா சுமக்க வேண்டும் என்று குழந்தையை குறித்து கூறும் கருத்து எந்த குழந்தையையும் பாதிக்கத் தான் செய்கின்றது.

இதனால் தானோ என்னவோ, அறிவியல் வளர்ந்தாலும், அறிவு விரிவடைந்தாலும், வாழ விரும்பாது கோழைகளாக சாக நினைப்போர் எண்ணிக்கை இன்று நகர்புறங்களிலேயே அதிகமாகி வருகிறது என்பது உண்மையாகிறது.

வாழ்க்கையை பாரமாக நினைத்து, தன்னை அழிக்க நினைப்போர் மனம் மாற பெற்றோர், குழந்தைகளை பாரமாக கருதாத நிலை உருவாகிடல் வேண்டும்.

## *மூன்றாம் நிலை*

## *நடை பயில*

பெற்றோரே, உங்களது குழந்தைக்கு நடை பயில கற்றுக் கொடுங்கள்.

குழந்தை அமர, தவழ, நிற்க, நடக்க என அத்தனையும் கற்றுக் கொள்வது பெற்றோராலேயே. இதனை கற்றுக் கொடுத்து, அதனை பார்க்கும் பெற்றோர் புழுங்காயிதம் அடைவதுண்டு. எந்த பெற்றோருக்கும் இது ஒரு அற்புதமான அனுபவமே.

குழந்தைகள் பயில விரும்புவதும் தங்களது பெற்றோரிடம் தான். நம்பிக்கை கொண்டு நடந்து வர சொல்லும் பெற்றோரின் மீது நம்பிக்கை கொண்டு, நடந்து செல்கின்றது. தவறினாலும் கரம் கொடுத்து தாங்குவார்கள். தவறு செய்தாலும் கைதட்டி சிரிக்காமல், மீண்டும் மீண்டும் முனைந்து கற்றுக் கொடுப்பார்கள் என்ற உறுதிப்பாட்டுடனே, குழந்தைகள் தங்களது பெற்றோரிடம் பயில முன்வருகின்றது.

பெற்றோரே, அறத்தினை, அன்பினை, அக்கரையினை கற்றுக் கொடுப்பதிலே கவனமாய் இருங்கள். இது உங்களை பின்னொரு நாளிலே புழுங்காயிதம் அடைந்திட செய்யும். இன்று மறந்தால், வரும் நாளிலே வருந்த நேரிடலாம்.

குழந்தைகள் நடைபயிலும் போது தடுமாற்றம் ஏற்பட்டால், தட்டிக் கொடுத்து, ஊக்கப்படுத்தி, உண்மையாய் இருக்க சொல்லிக் கொடுத்தால், ஊரும் மகிழும், உள்ளமும் மகிழும்.

## *நான்காம் நிலை*

## *பார்ப்பது*

பெற்றோர் உங்களது குழந்தைகளை பார்த்துக் கொள்ளுங்கள்.

பெற்றோரின் மிக முக்கிய கடமைகளில் குழந்தைகளை பார்ப்பதுஇ கண்காணிப்பது, காவல் காப்பது, முறைப்பது என்பது எல்லாம், தங்களது குழந்தைகளை பார்த்துக் கொண்டால் அவசியமில்லாததாகிறது.

பார்ப்பது என்று சொல்லும் போது, அவர்களின் ஒவ்வொரு அடியையும் பார்த்து பார்த்து வந்தால் போதுமானது. தன்னை பார்க்கிறார்கள். தன்மீது தன் பெற்றோருக்கு அக்கரையுண்டு என்ற தன் நம்பிக்கையில் எந்த பிள்ளையும் கவனமாக வளரும்.

பெற்றோர் பார்ப்பது இல்லை என்றாகும் போது, பிள்ளைகள் தவற நேரிடுகின்றது. இதனால் பின்நாளில் பெற்றோர், கண்கானிக்கும் கேமரா போலவும், காவல் காக்கும் காவலர்கள் போலவும், முறைத்து முணங்கும் சாத்தான்களாகவும் மாற நேரிடுகின்றது. இது பெற்றோருக்கும், பிள்ளைகளுக்கும் பார்வையில்லாத நிலையை உருவாக்கி விடுகின்றது.

கண் இருந்தும் குருடர்களாக வாழ்வதை விடுத்து, பார்வையினை செலுத்தி பாதுகாப்போம். குடும்பம் ஒளி பெறும்.

## ஐந்தாம் நிலை

## பகிர்தல்

பெற்றோரே, உங்களது குழந்தைகளோடு பகிர்ந்து கொள்ள முன்வாருங்கள்.

பெற்றோர் பல நேரங்களில் தங்களது பாரம் தங்களோடு போகட்டும். பிள்ளைகளுக்கு தங்களது தியாகம் தெரிந்திடக் கூடாது, தங்களது வடுக்கள் தங்களது குழந்தைகளுக்கு தெரிந்திடக் கூடாது என்று நினைப்பது உண்டு.

இத்தகைய வாழ்வு குழந்தைகளை ஆரோக்கியமான சூழலில் வளர்த்தெடுக்காது என்பதனை புரிந்து கொண்ட பெற்றோரால், குழந்தைகள் வாழ்வு வளம் பெறும். தங்களது பாரம் என்ன? தாங்கள் செய்யும் தியாகம் என்ன? தங்களது குடும்ப சுமையால் ஏற்படும் காயங்கள், அது தரும் வடு என்ன என்பதனை பெற்றோர்கள் பகிர்ந்து கொள்ள முன்வரும் போதே, குழந்தைகள் வளர்ச்சி சீராக அமையும். தாங்களும் இத்தகைய உயர்ந்த நிலையடையந்திடல் வேண்டும் என உணர்வது உண்டு.

இத்தகைய சூழலில் வளரும் குழந்தையே சமூக சிந்தனையுள்ளவர்களாகவும் வளர்வார்கள்.

## ஆறாம் நிலை

## துடைத்தல்

மடியில் தவழும் குழந்தை, தாயின் அழுகையை கண்டு, தன் பிஞ்சுக்கரங்களால் துடைத்தெடுக்க முன்வரும் போது, தாயின் சுகமே தனி.

குழந்தையின் இந்த உணர்வு ஊக்கப்படுத்திடப்படல் வேண்டும். இந்த குணமே பிஞ்சுக் குழ்நதையின் மனதில் ஈரத்தையும், இரக்கத்தையும் வளர்த்தெடுக்கும். இது பெற்றோரின் கடமையே. இதனை வளர்த்தெடுக்கும் போதே, சமூகத்தில் ஈரமுள்ள இதயத்தார் பலர் தோன்றுவார்கள்.

குழந்தைகளிடம் எத்தகைய அறங்களை கற்றுக் கொடுக்கின்றோமோ, அதனையே சமூகத்தில் நாம் பெற்றிட முடியும். இதற்கு ஒரு வீரம் வேண்டும். இரக்கச் செயலையும் இந்த மண்ணுலகில் தொடர்ந்து செய்திட வீரம் வேண்டும். ஊரு என்ன பேசும், உலகம் என்ன நினைக்கும் என பல பேர் கடின இதயமாய் மாற்றி, காய்ந்த இதயத்தினை கொண்டு கடமைக்காக சிரிப்போர் உண்டு நம்மிடையே.

இவர்கள் வீரமில்லாதவர்களே. அன்னை தெரசா, தமியான், ஆயர் ஆஸ்கார் போன்றோர் திருச்சபையில் இத்தகைய வீரத்துடனே ஈவு இரக்கத்துடனே அறச் செயல்களை செய்து அழைத்தவருக்கு சான்று பகர்ந்தவர்கள். இவர்களை பிள்ளைகளுக்கு மாதிரியாய் கற்றுக் கொடுப்பதும் கடமையே.

## ஏழாம் நிலை

## எழுப்புதல்

பெற்றோரே உங்களது குழந்தைகள் எழுந்து நிற்க கரம் கொடுங்கள்.

இன்றைய வாழ்வு சூழலில் பிள்ளைகள் எழுந்து உயர்ந்த நிலை பெற பெற்றோரே கரம் கொடுத்திடல் வேண்டும். தவறி விழும் மானிடம் எழும்பிட பிறர் கரம் கொடுப்பது அவசியமாகின்றது.

சமூகத்திலே இன்றைக்கு மனிதர்கள் சமூக பிராணியாக இருந்தாலும், மற்றவர்கள் துழணயாக இருந்தாலும் குடும்பம் என்னும் வலைக்குள்ளாக வந்தாக வேண்டியது அவசியமாகின்றது. குடும்பத்தைப் போன்ற ஒரு அற்புதமான அமைப்பு இன்று வேறு உண்டோ என்றே கேட்கத் தோன்றுகின்றது.

ஒவ்வொரு மனிதனுக்குப் பின்னும் அவனது துணைவி உண்டு, ஒவ்வொரு மனுசிக்குப் பின்னும் அவள் துணைவர் உண்டு என்பது உண்மையாகும் போது, குடும்பத்தின் கனவுகளாகிய குழந்தைகள் தலை நிமிர்ந்து நின்றிட பெற்றோர்களே கண்கண்ட தெய்வங்களாகவும், நல் முதல் ஆசிரியர்களாகவும் திகழ்கிறார்கள் என்பதுவே உண்மை.

பெற்றோர்கள் இந்த பொறுப்பினை உணர்ந்து குழந்தைகள் எழும்பி நின்றிட கரம் கொடுப்பது காலத்தின் கட்டாயமே.

## எட்டாம் நிலை

## பழி சுமத்தாதீர்

பெற்றோரே உங்களது பாவங்களை பிள்ளைகள் மேல் சுமத்தாதீர். மனிதர்க்ள தங்களது வாழ்வில் பழிபாவத்திற்கு இன்று அஞ்சாத நிலையே உள்ளது. என்ன நடந்து விட்டது. கண்ணை குத்திவட்டாரா? ஊமையாய் ஆக்கிவிட்டாரா என்ற ஆணவப் பேச்சே இன்று அதிகரித்து போய் இருக்கிறது.

செய்கின்ற பாவங்கள் தங்களது தலைமுறையை பாதிக்கும் என்ற உணர்வு இல்லாது போவது வருத்தமாய் உள்ளது. தாங்கள் செய்கின்ற தீச்செயலைப் பார்க்கின்ற தங்களது அடுத்த தலைமுறையினரும் அதனையே செய்ய முன்வருவர். எனவே இதுவே தொடர் கதையாய் மாறி விடும் இது வீட்டைப் பாதித்து, சமூகத்தைப் பாதித்து, நாட்டையும், நானிலத்தையும் பாதிக்கும் என்ற உணர்வு இல்லாது இருப்பதுவே இந்த காலத்தின் அவலமாக உள்ளது.

பாவங்களை பெருக்காது வேதம் கூறுவது போல பாம்பை கண்டு நடுங்குவது போல பாவத்தை கண்டு நடுங்கி விலகி செல்ல முன்வருவோம். நாம் பாவங்களை கண்டு விலகிச் செல்லவும் பாவத்தின் தண்டனை சாவிலே தான் முடியும் என்ற தெய்வ அச்சத்தோடு வாழ் முன்வருவோம். அதுவே அடுத்த தலைமுறையினருக்கு நாம் காட்டும் நல்ல மாதிரிகையாகும்.

தெய்வ அச்சம் இறைஆவியின் கொடையே. ஆவியின் வரம் கேட்போம்.

## *ஒன்பதாம் நிலை*

## *தீவிரம் எதிலே!*

லட்சியத்தை அடைந்திட தீவிரம் காட்டிட வேண்டும்.

ஒவ்வொரு மனிதனும் தன் லட்சியத்தை அடைந்திட முன்வர வேண்டும். பவுல் அடிகளார் கூறுவது போல ஒட்டத்தின் லட்சியத்தை அடைவதுவையே கண்முன் கொண்டு ஒடுகின்றேன். அந்த லட்சியம் எதற்காய் என்னை என்கிறிஸ்து ஆட்கொண்டாரோ அதை அடையும் வரை நான் ஒடிட வேண்டும். அப்பொழுது தான் அவர் ஆயத்தப்படுத்தியுள்ள பரிசினை பெற்றட முடியும். அந்த பரிசு கிறிஸ்து இயேசுவின் மூலம் கடவுள் எனக்கு மேலிருந்து விடுக்கும் அழைப்பே ஆகும். பிலி 03

அவர் நம்மை தாயின் கருவரையிலேயே தேர்ந்து கொண்டார். நம்மை பெயர் சொல்லியும் அழைத்திருக்கிறார். நமக்கென பணியையும் தந்துள்ளார். வாழும் காலத்திலேயே நாம் இதனை செய்துமுடிக்க முன்வர வேண்டும்.

இதனை செய்வதிலே இன்றைக்கு தீவிரம் காட்டிட வேண்டும். இந்த தீவிரம் கொலைவெறியாக அல்ல, மாறாக ஆர்வத்தோடும், உண்மை ஈடுபாட்டோடும் அமைந்திடல் வேண்டும்.

## *பத்தாம் நிலை*

## *உரிதல்*

மற்றவர்களின் தோலை உரிப்பதிலே இன்று ஆர்வமாய் இருக்கும் நாம், மற்றவர்கள் நம்முடைய தோலை உரிக்கும் போது நாம் கூக்குரலிடுகின்றோமே நியாயமா?

இன்றைக்கு பலரின் வேலையே மற்றவர்களின் அசிங்கங்களை, அந்தரங்கங்களை அலசி ஆராய்ந்து அதிலே ஆராய்ச்சி செய்து ஊருக்கு உலகத்திற்கு வெளிச்சம் போட்டு காட்டுவதிலே கொலைவேறியோடு இருப்பதை பார்க்கின்றோம்.

மற்றவரின் வாழ்வை உரிகின்ற நாம், நம்மையும் மற்றவர்கள் உரிக்க அனுமதின்னத்தானே செய்ய வேண்டும். மாறாக நம்மை மற்றவர்கள் உரித்துக் காட்ட முன்வரும் போது மட்டும் ஊரைக் கூப்பிட்டு உலை வைக்க முன்வருவது என்ன நியாயம்

மற்றவரின் வாழ்வில் மூக்கை நுழைத்து, அந்தரங்கங்களை அரங்குக்கு கொண்டு வருவது என்ன நியாயம். பொது சேவையாகிட முடியுமா? இல்லை பிறரன்பு பணியாகிட முடியுமா? இதற்காகவா அழைக்கப்பட்டு இருக்கிறோம்.

மல்லாக்க படுத்துக் கொண்டு துப்பிக் கொள்வதும், கண்ணாடிக்குள் இருந்து கல்லை எறிந்து கொள்வதும் நம்முடைய பல்லைக் குத்திக் கொள்வது போல ஆகாதா?

பவுல் அடிகளார் தெசலோனியருக்கு எழுதும் போது, சோம்பேறிகளாக சுற்றித் திரிந்து அடுத்தவர் வேலையில் தலையிடுவதை கடுமையாக சாடுகின்றார். பிறர் வளர்ச்சிக்குரியவைகளையெ செய்து வாழ்வது தான் மனித வாழ்வின் சிறப்பம்சம்.

## *பதின்னென்றாம் நிலை*

## *அறைதல்*

பெற்றோரின் கடமையே தன் பிள்ளைகளை நல்ல பண்புகளோடும், கிறிஸ்தவதன்மைகளோடும் வளர்த்தெடுக்க கடமைப்பட்டவர்கள். இதனையே குழந்தைகளின் திருமுழுக்கின் போது திருச்சபையின் முறைமைகளுக்கு ஏற்ப வளர்த்தெடுக்க உறுதி பூண்டு கொள்கின்றேன் என தெய்வ சன்னதியில் உறுதி எடுத்தக் கொள்வதுண்டு.

வளர்த்தெடுக்க முன்வரும் போது, ஐந்திலேயே வளைக்க வேண்டியவைகளை வளைத்தும், பாடிக்கற வேண்டியதை பாடியும், ஆடிக் கறக்க வேண்டியதை ஆடியும் தான் கறந்திட வேண்டும். இன்றைய சமூகத்தில் ஒன்று, இரண்டு என வைத்துக் கொண்டு அடிக்க கூடாது, திட்டக் கூடாது, மனம் நோகச் செய்யக் கூடாது என பார்த்து பார்த்து பொத்தி பொத்தி வளர்த்து என்ன சாதித்து விட்டோம்.

கல்லூரியில் உடன் பயிலும் மாணவர்களை அறுத்துக் கொல்வது. போதிக்கும் ஆசிரியரை கொலை செய்து பார்ப்பது. ஊதாரித்தனமாக பணத்தை செலவழித்து உதாவக்கறையாக வளர்த்து அதற்காக கண்ணிரிலேயே காலத்தை கரைப்பது தான் வாழ்க்கையா?

நீதி மொழி 23: 13 சொல்லுகின்றது. பிள்ளைகளைத் தண்டித்துத் திருத்தத் தய்ஙகாதே. பிரம்பினால் அவர்களை அடித்தால் சாகமாட்டார்கள். நீ அவர்களை அடித்தால், பாதாளத்துக்கு தப்புவிக்கிறவனாவாய்.

## *பதின்னென்றாம் நிலை*

## *மரித்தல்*

வாழ்க்கை பிறருக்கு என்றால், சாவு யாருக்காக?

நாம் பிறந்தது, நம்முடைய வாழ்வில் அழைப்பு பெற்றது, ஆவியின் வரங்களை பெற்றது பொதுநன்மைக்காக என்றால் நம்முடைய சாவும் பிறருக்காக அமைவது தானே அர்த்தமுள்ளது. இதனையே தன் மகனுக்கு மரியாள் உணர்த்தி தன் மகனையே சிலுவையில் கையளிக்க முன்வந்தார்.

என்பொருட்டு தன் உயிரை கொடுப்பவர்கள் அதனை பெற்றுக் கொள்வார்கள் என்று இயேசுவும் கூறுகிறார்.

தான் கூறியதையே அவரும் செய்து காட்டுகின்றார். பிறர் நலனுக்காய் தன்வாழ்வையே கையளிக்கின்றார். யாரும் அழியக் கூடாது எல்லாரும் வாழ்வு பெற வேண்டும் என்பதற்காக தன்னை கையளிக்க முன்வருகின்றார். அதனால் தந்தையும் அவரை தான் சொன்னபடியே தன் வலப்புறத்தில் அமரும் பாக்கியத்தை தந்து உயர்த்தினார்.

இன்றும் பிறர் வாழ தன்னை கையளிக்கும் யாவரையும் உயர்த்தி அவர்களது மறைசாட்சிய இரத்தத்தால் பல ஆயிரம் பேரை எழுப்பி சாட்சியமாய் மாற்றிக் கொண்டே இருக்கின்றார். பிறருக்காகவும், உயர்ந்த கொள்கைகளுக்காகவும் மரித்தல் உயர்வானது.

## *பதின்மூன்றாம் நிலை*

## *மடி கணம்*

மடியிலே கணம் இருந்தால் வழியிலே பயம் இருக்கும் என்பர். தன்மீது குற்றம் இருந்தால் பிறருக்கு அஞ்ச வேண்டியது இருக்கும். தன்மீது கறையில்லாத போது யாருக்கு அஞ்ச வேண்டும். மனிதர்களுக்கு அஞ்சுவதைவிட கடவுளுக்கு ஆன்மாவையும், உடலையும் எரிநரகத்திற்கு தள்ள வல்லவருக்கு அஞ்சுங்கள்.

இங்கு யாருக்கும் அஞ்சாது தன் மகனை மடி சுமக்கின்றாள். மடி இங்கு கணம் இல்லை மனம் இங்கு கணமாகியிருக்கின்றது. பாதகச் செயலை செய்து விட்டார்களே என்று மனத்திலே பாரத்தோடு, இறந்த மகனை மடி சுமக்கின்றாள் தாய் மரியாள்.

இன்றைக்கு நம்முடைய மனம் கணமாகின்றது. காரணம் நம்முடைய மடியிலே கணம் கொண்டு, அந்த பாதக பாவச் செயலை தொடர்ந்து செய்து வருவதால் நம்முடைய மனம் பாரமாய் இருக்கின்றது. நமக்கும் நாம் மதிக்கும் அன்னை மரியாளுக்கும் உள்ள வேறுபாடு இது தான்.

நம்முடைய பாவங்களை அகற்றி, பிறர் பாரங்களை இறக்க நம்முடைய மடியை அர்ப்பணிக்க மனப்பாரத்தோடு மன்றாடுவோம். பாவத்தால் வாழ்க்கையை ரணமாக்கி, மனத்தை கறைப்படுத்தாது வாழ்ந்திடுவோம்.

## *பதினான்காம் நிலை*

## *எளிமை*

பெற்றோரே மனுமகன் தலை சாய்க்க இடமில்லை. மாற்றானின் கல்லறையே கிடைத்தது.

இன்றைக்கு எளிமை நம்வாழ்வில் இடம் பெறாது போகின்றது. நுகர்வு வெறிக்கு அடிமைகளாகி இல்லத்தை நிரப்பிக் கொண்டே போகின்றோம். கழிக்க வேண்டியவைகளை கழிக்காது இடத்தை நிரப்பிக் கொண்டே போகின்றோம். பயன்படுத்துகின்றோமோ இல்லையோ வாங்கிக் குவித்துக் கொண்டே இருக்கின்றோம். யாருக்கும் நன்மையில்லையே. இதனால் எளிமையான வாழ்வினை அடுத்த தலைமுறையினருக்கு போதிக்காமல் போகின்றோமோ என நினைக்கத் தோன்றுகின்றது.

எளிமையான வாழ்வு நம்முடைய மண்ணுக்கே சொந்தமானது. கந்தையானாலும் கசக்கிக் கட்டு. கூழானாலும் குளிர்த்து விட்டு கூடி என்றெல்லாம் கற்றுத் தந்தது இந்த மண். ஆனால் இன்று விளம்பரங்களை பார்த்து பார்த்து மதியினை இழந்து வாங்கிக் குவித்து நஷ்டப்பட்ட குடும்பங்களே அதிகம். எளிமை இல்லாது பகட்டு பந்தாவிட்டு அடிமையாகி வாழ்வை தொலைத்தவர்கள் ஏராளம். இதனால் பொருளாதார தேவை உருவாக்கப்பட்டு மனங்கள், இல்லங்கள் குப்பைத் தொட்டிகளாக மாறி பிணங்கள் வைக்கும் கல்லரையாக மாறி வருவதை உணரப் போவது எப்பொழுது?

எளிமையை வாழ்வாக்கி, அதனையே இயேசுவின் மதீப்பிடாக வளரும் தலைமுறையினருக்கு கற்றுக் கொடுத்து புதியமனப்பாங்கு பெற்றவாகளாக உயிர்ப்பிக்கச் செய்ய உறுதியெடுப்போம்.